பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

02 09 2024 **MONDAY** **6.30 PM**

மாநில செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. பாரிஸ் பாராலிம்பிக், பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் நிதேஷ்குமார் தங்கப்பதக்கம் வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

2. உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதி செய்வதற்கான மூவாயிரத்து தொள்ளாயிரத்து 79 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

3. வேளாண் மற்றும் ஊரகத்துறை வளர்ச்சியில் உயிரி எரிபொருள் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. வேளாண் விளைப்பொருட்களை எளிதாக எடுத்துச் செல்வதற்கென நீர்நிலைப்பகுதிகளில் ஆயிரத்து 281 தரைப்பாலங்கள் கட்டப்பட உள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

5. தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் குற்றங்கள் அதிகரித்துள்ளதாக பிஜேபி குறை கூறியுள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<<>>>>>>

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் இந்தியா, இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

பேட்மிண்டன் போட்டியில் நிதேஷ்குமார் தங்கப்பதக்கம் வென்று வரலாற்று சாதனை படைத்தார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 21-14, 18-21, 23-21 என்ற செட் கணக்கில், இங்கிலாந்தின் **Daniel Bethell**-ஐ வென்றார்.

*(சவுண்ட் பைட் - வெற்றித்தருணம் - 20 செகண்ட்ஸ்)*

பாராலிம்பிக் பேட்மிண்டன் போட்டியில் தங்கப்பதக்கம் வெல்லும் முதலாவது இந்தியர் என்ற சாதனையையும் அவர் படைத்தார்.

ஆடவர் வட்டு எறிதலில் இந்தியாவின் **Yogesh Kathuniya** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியா, இதுவரை இரண்டு தங்கம், மூன்று வெள்ளி, நான்கு வெண்கலப்பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் 22-ஆவது இடத்தில் உள்ளது.

**<<<<<<<>>>>>>>**

உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதி செய்வதற்கு வகை செய்யும் மூவாயிரத்து தொள்ளாயிரத்து 79 கோடி ரூபாய் மதிப்பிலான பயிர் அறிவியல் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், ஆறு முக்கிய அம்சங்களை இந்த திட்டம் கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

அடுத்த 23 ஆண்டுகளுக்கு உணவு பாதுகாப்பை உறுதி செய்வதற்கு இது உதவிடும் என்றும் அமைச்சர் கூறினார்.

வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சிப்பணிகளை வலுப்படுத்தும் 2 ஆயிரத்து 291 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்திற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இயற்கை வேளாண்மைக்கும் எந்தவொரு பருவ காலத்திலும் விளையும் பயிர்களை உருவாக்க ஊக்கமளிக்கும் வகையிலும் இந்த திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தேசிய கல்விக்கொள்கை வழிகாட்டுதலின் அடிப்படையில் இந்த திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

தோட்டக்கலை பயிர் மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த திட்டத்திற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்ததாக அவர் தெரிவித்தார்.

இந்த திட்டம் 860 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட உள்ளதாக திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<<<>>>>>>

வேளாண் மற்றும் ஊரகத்துறை வளர்ச்சியில் உயிரி எரிபொருள் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி கூறியுள்ளார்

புதுதில்லியில் உயிரி எரிபொருள் தொடர்பான சர்வதேச மாநாட்டில் இன்று பங்கேற்று அவர் பேசினார்.

உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுப்பதற்கு இறக்குமதி குறைக்கப்பட்டு, ஏற்றுமதி அதிகரிக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் கூறினார்.

<<<<<<<>>>>>>

வேளாண் விளைப்பொருட்களை விவசாயிகள் எவ்வித சிரமமும் இன்றி எடுத்துச் செல்வதற்கு ஏதுவாக நீர்நிலைப்பகுதிகளில் ஆயிரத்து 281 தரைப்பாலங்கள் கட்டப்பட உள்ளதாக பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எ வ வேலு கூறியுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே 16 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தரைப்பாலத்தை இன்று திறந்துவைத்து அவர் பேசினார்.

அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் இந்த தரைப்பாலங்கள் அமைக்கப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இன்று திறக்கப்பட்ட இந்த தரைப்பாலத்தின் மூலம் 16 ஊராட்சிகளை சேர்ந்த மக்கள் பயன்பெறுவார்கள் என்றும் திரு எ வ வேலு கூறினார்.

<<<<<<<>>>>>>

உதகையில் உள்ள குதிரை பந்தய மைதானத்தில் சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கப்பட உள்ளதாக வேளாண் துறை அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

இன்று உதகையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த மைதானம் தற்போது தோட்டக்கலைத்துறையின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிததார்.

இதில் அமையவுள்ள சுற்றுச்சூழல் பூங்கா அடுத்த ஆண்டு கோடை சீசனுக்கு செயல்பாட்டுக்கு வரும் என்று அவர் கூறினார்.

பல கோடி ரூபாய் மதிப்பிலான இந்த இடம் பொதுமக்களுக்கு பயன்படாமல் இருந்து வந்ததாகவும் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளதாக பிஜேபி குறை கூறியுள்ளது.

இதுதொடர்பாக, அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் கடந்த வாரம் நடைபெற்ற குற்றச்சம்பவங்களை புள்ளி விவரங்களுடன் எடுத்துரைத்துள்ளது.

<<<<<<<>>>>>>

நெல் கொள்முதலுக்கான ஊக்கத்தொகையை தமிழக அரசு உயர்த்த வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் நேரடி நெல் கொள்முதல் அளவு கடந்த சில ஆண்டுகளாக குறைந்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இதற்கான காரணங்களை கண்டறிந்து அவற்றை சரி செய்ய தேவையான நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு ராமதாசு கோரியுள்ளார்.

<<<<<<<>>>>>>

பிரதமரின் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக காதி மற்றும் கிராமத்தொழில்கள் ஆணையத்தின் தலைவர் ஸ்ரீ மனோஜ்குமார் கூறியுள்ளார்.

விருதுநகரில் இந்த திட்டத்தின்கீழ், மானியத்தொகையை பயனாளிகளுக்கு வழங்கி அவர் பேசினார்.

கடந்த பத்தாண்டுகளில் மட்டும் இந்த திட்டத்தின்கீழ் 80 லட்சத்திற்கும் மேற்பட்ட புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டதாக அவர் கூறினார்.

காதி உற்பத்தி கடந்த நிதியாண்டில் 224 கோடி ரூபாய் அளவிற்கு இருந்ததாகவும் ஸ்ரீ மனோஜ்குமார் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு பிளாஸ்டர் ஆப் பாரிஸ் சிலைகளை வைக்க காவல்துறை அனுமதி அளிக்கக்கூடாது என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான மனுவினை விசாரணை செய்த நீதிபதி திரு ஜெயச்சந்திரன் இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தார்.

சுற்றுச்சூழலை பாதிக்காத வகையிலான சிலைகளுக்கு மட்டுமே அனுமதி அளிக்க வேண்டும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 37 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

தருமபுரி மாவட்டத்தில் உள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு கல்லூரி மாணவர் விடுதியை மாநில அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ் இன்று பார்வையிட்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவினை ஆய்வு செய்தார்.

<<<<<<<>>>>>>

திருவாரூர் மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுவதாக ஆட்சியர் திருமதி சாருஸ்ரீ கூறியுள்ளார்

<<<<<<<>>>>>>

தென்காசி மாவட்டத்தில் மகளிர் நலனுக்கான திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தின் சேவையை ஆட்சியர் திரு கமல் கிஷோர் இன்று தொடங்கிவைத்தார்.

<<<<<<<>>>>>>

மயிலாடுதுறை மாவட்டத்தில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பராமரிப்பு குறித்த முகாமினை ஆட்சியர் திரு மகாபாரதி இன்று தொடங்கிவைத்தார்.

<<<<<<<>>>>>>

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஊட்டச்சத்து விழிப்புணர்வு கண்காட்சியை ஆட்சியர் திரு கிராந்தி குமார் பாடி இன்று தொடங்கிவைத்தார்.

<<<<<<<>>>>>>

கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் 27 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி அழகு மீனா பயனாளிகளுக்கு வழங்கினார்.

<<<<<<<>>>>>>

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் வடிகால் பணிகளை மேயர் திருமதி பிரியா இன்று ஆய்வு செய்தார்.

<<<<<<<>>>>>>

தென்காசியிலிருந்து, கேரளாவிற்கு கடத்தி செல்லப்பட்ட 15 டன் ரேஷன் அரிசியை குடிமைப்பொருள் வழங்கல் குற்ற புலனாய்வுத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

<<<<<<<>>>>>>

திருநெல்வேலியில் உள்ள நெல்லையப்பர் திருக்கோவில் ஆவணி மூலத்திருவிழா கொடியேற்றத்துடன் வெகுவிமரிசையாக தொடங்கியது.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஸ்லோவேனியாவில் நடைபெற்ற சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Divyanshi** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

<<<<<<<>>>>>>

ஆசிய சப்-ஜூனியர் குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் **Ravi Sihag, Lakshay Budhwar, Naman Kumar, Lakshya Balhara** ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<<<<>>>>>>**

ஸ்வீடனுக்கு எதிரான டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் பங்கேற்பதிலிருந்து சுமித் நாகல் விலகியதையடுத்து, அவருக்கு பதிலாக **16** வயதான **Manas Dhamne** அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இப்போட்டி ஸ்வீடனின் **Stockholm** –மில் வரும் 14-ஆம் தேதி தொடங்குகிறது.

**<<<<<<<END>>>>>>**